இதுபோன்ற தனியார் பால் நிறுவனங்கள்மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிற பாலின் தரம் பால் வளத் துறையின் மூலமாகவும், நகராட்சி, மாநகராட்சிகள் மூலமாகவும் தேவையானபொழுது பரிசோதிக்கப்பட்டு வருகிறது. அப்படி எங்காவது அதிலே குறை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் எடுக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 119, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

119—

பேருந்து நிலையம்

***9188—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து நெரிசல் காரணமாக வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வாழப்பாடி பேருந்து நிலையத்தில் தற்போது போக்குவரத்து இடையூறு இல்லாமல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு வாழப்பாடி பகுதியில் போதுமான இட வசதி இல்லை. வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான அவசியமும் எழவில்லை.

2004 ஜூலை 31]

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், பேருந்து நிலையத்தை அகலப்படுத்தி இருப்பதனால் அங்கு நெரிசல் அதிகமாக இல்லை என்று கூறினார்கள். ஆனால், அகலப்படுத்திய பிறகும் இன்னும் போக்குவரத்து நெரிசலில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால், வாழப்பாடி பஞ்சாயத்து யூனியன் அமைந்துள்ள பகுதிக்கு மேற்குப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வாழப்பாடியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 10 இலட்சம் கடனுதவி பெற்று பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரப்பளவு 0.75 ஏக்கர் ஆகும். மேற்கூறிய பேருந்து நிலையத்தில் 1 உணவு விடுதி மற்றும் 8 கடைகள் கட்டப்பட்டு, வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் கடன் தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், வாழப்பாடி பேருந்து நிலையத்திற்குள் தற்போது ரூ.9.67 இலட்சம் மதிப்பீட்டிலே சுற்றுப்புறச் சுவர், பேருந்துகள் நிறுத்துமிடம், தீப்பிடிக்காத கூரை, நவீனக் கழிப்பிடம், இலவச சிறுநீர் கழிப்பிடம், சைக்கிள் நிறுத்துமிடம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வாழப்பாடி பேருந்து நிலையத்தில் தற்போது போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு வாழப்பாடி பகுதியில் போதுமான இட வசதி இல்லை. மேலும், பேருந்து நிலையம் தற்போது செயல்பட்டு வரும் இடத்தில் இருப்பதுதான் பொது மக்களின் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். எனவே, வாழப்பாடி பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.